**செய்தி வெளியீடு எண்.868** **நாள்: 29.11.2018**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கப் பிரதிநிதிகள் (TANSA) இன்று **(29.11.2018)** மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.D.ஜெயக்குமார் அவர்களை, தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்தனர். அப்போது, தலைமைச் செயலகத்தில் தற்காலிக பதவி உயர்வு பெற்ற உதவிப் பிரிவு அலுவலர்களுக்கு ஊதிய பாதுகாப்பு வழங்கி அரசாணை வெளியிட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தமிழக அரசுக்கும் தங்களது நன்றியை தெரிவித்ததுடன் அரசு ஊழியர்களின் நலனுக்காக பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவினை அளித்தார்கள்.

அதேபோன்று, இன்று **(29.11.2018)** சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் (TNGOU), மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.D.ஜெயக்குமார் அவர்களை நேரில் சந்தித்து அரசு ஊழியர்களின் நலனுக்காக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**